EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2022
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்

**9577/01**

**Tamil Language, Literature**

**12 September 2022**

**1 hour 15 minutes**

## தாள் 1

Paper 1

Additional Materials: Answer Booklet

Authorised Tamil-Tamil dictionaries may be taken into the examination room.

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. இவ்வினாத்தாளின் முதற்பகுதியும் இரண்டாம் பகுதியும் தனித்தனியாக அச்சிடப்பட்டுள்ளன.

2. முதற் பகுதிக்கும் இரண்டாம் பகுதிக்குமான விடைகள் அனைத்தையும் ஒரே விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.

3. அகராதியைப் பயன்படுத்துதல்:

அ) முதற்பகுதிக்கு விடையளிக்கும்போது நீவிர் அகராதியைப் பயன்படுத்தலாம்.

ஆ) இரண்டாம் பகுதிக்கு விடையளிக்கும்போது அகராதியைப் பயன்படுத்தக்கூடாது.

இ) நீவிர் பயன்படுத்தும் அகராதியின் பெயரை விடைப்புத்தகத்தின் முகப்பு அட்டையின் மேல் வலப்பக்கக் கோடியில் எழுதவேண்டும்.

4. ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

5. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

More papers at www.testpapersfree.com

| இவ்வினாத்தாளில் மொத்தம் 3 பக்கங்கள் அச்சிடப்பட்டுள்ளன. |
|---|

**பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றைப் பற்றி ஏறத்தாழ 350 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக.**
**(35 மதிப்பெண்கள்)**

Q1 'ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.' இக்கருத்தினை நீ ஏற்றுக்கொள்கிறாயா?

Q2 பெற்றோர்களே பிள்ளைகளின் உயர்வு தாழ்வுக்குக் காரணமானவர் – விவாதிக்க.

Q3 நட்புக்கு அடிபணிந்து, உங்கள் சிந்தனையை நீங்கள் மாற்றியமைக்க நேர்ந்தது. உங்கள் நண்பன் உங்களுக்குக் கூறிய ஞானத்தின் வார்த்தைகள் யாவை என்பதையும் அவை உங்கள் சிந்தனையை எவ்வாறு மாற்றியது என்பதையும் அதன்வழி நீ கற்றுக் கொண்ட பாடத்தையும் விளக்கி எழுதவும்.

More papers at www.testpapersfree.com

Q4 பின்வரும் தகவல்களைக் கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.





(முற்றும்)

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2022
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி,

**9577/02**

தாள் 2
Paper 2

**12 September 2022**

**1 hour 45 Minutes**

# இலக்கியம்

More papers at www.testpapersfree.com

## தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்

1 இப்பகுதிக்கு விடையளிப்பதற்கு 1 மணிநேரம் 45 நிமிடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

2 ஒவ்வொரு பிரிவின் தொடக்கத்திலும் உள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.

இவ்வினாத்தாளில் மொத்தம் 7 பக்கங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

‘அ’ பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் (1)** (32 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

தெய்வத்தால் ஆகாதது எனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தருமென்று வள்ளுவர் கூறுகிறார். அதாவது முன்வினையால் ஒரு காரியம் நடைபெறாமல் போனாலும் தனது உடலை வருத்தி உழைக்கும் போது அதற்கான பலன் கிடைக்கும் என்பதே இதன் பொருள்

More papers at www.testpapersfree.com

ஆகும். நாம் முயற்சியுடன் உழைக்கும் போது வெற்றி நமக்கு கிடைத்தே தீரும். வள்ளுவர் மட்டுமல்லாது ஔவையார், விவேகானந்தர் போன்ற பலரும் உழைப்பைப் பற்றி கூறியுள்ளனர்.

கடின உழைப்பு அனைவருக்கும் சிறப்பையே தரும். நாம் வாழுகின்ற சூழலை உற்று நோக்கினால் ஒவ்வொரு உயிரினத்திடம் இருந்தும் கடின உழைப்பைக் கற்றுக் கொள்ளலாம். தேனீக்களும் சிலந்திகளும் கடின உழைப்பிற்கு மிகச்சிறந்த உதாரணமாக கொள்ளப்படுகின்றன. சிலந்தியின் வலை எத்தனை முறை கலைக்கப்பட்டாலும் மீண்டும் தனது வலையைப் பின்னி வாழும் திறமை கொண்டது. தேனீக்கள் சிறியளவு தேனைச் சேகரிக்க பதினாறு மைல் தூரம் வரை பயணம் செய்து கடினமாக உழைக்கின்றன. உழைப்பு எனப்படுவது ஒவ்வொருவரிற்கும் அளிக்கப்பட்ட வேலையை முழுமுயற்சியுடன் செய்தல் ஆகும். உழைப்பில்லாமல் உயர்வு இல்லை. ஒருவர் எந்தளவிற்குக் கடினமாக உழைக்கின்றாரோ அந்தளவிற்கு உயர்ந்த நிலையை அடைய முடியும். வேலை செய்பவர்கள் அவர்களது வேலையை முழுமுயற்சியுடன் செய்தால் மட்டுமே உயர்ந்த இடத்தைப் பெற முடியும். மாணவர்கள் கடினமாக படித்தால் மட்டுமே தேர்வில் சித்தி பெற முடியும். ஒரு மனிதன் தனது வாழ்நாளில் பத்தாயிரம் மணிநேரம் கடினமாக உழைத்தால் தனது துறையில் உன்னதமான இடத்தை அடைந்து விடலாம் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள். இதுவே உழைப்பின் சிறப்பு ஆகும்.

இந்த உலகத்தில் கடின உழைப்பால் உயர்ந்தவர்கள் பலரைக் குறிப்பிடலாம். அவர்களுள் தோமஸ் அல்வா எடிசன், ஆபிரகாம் லிங்கன், அப்துல் கலாம் போன்றோர் குறிப்பிடத்

 (அடுத்தப் பக்கம் பார்க்க)

தக்கவர்களாவார். கண்டுபிடிப்புக்களின் தந்தை என்று அழைக்கப்படுகின்ற தோமஸ் அல்வா எடிசன், கடின உழைப்பிற்குச் சிறந்த உதாரணமாக கூறக்கூடியவர். மின்குமிழைக் கண்டு பிடித்த தோமஸ் அல்வா எடிசன், மின்குமிழ்கள் நீண்ட நேரம் எரிவதற்கான

More papers at www.testpapersfree.com

சரியான மின்னிழையை கண்டறிவதற்காக கிட்டத்தட்ட ஐந்தாயிரம் இழைகளைப் பரிசோதித்தும் தோல்வியையே தழுவினார். பின்னர் விடாமுயற்சியுடன் கடினமாக உழைத்து சரியான இழையை கண்டுபிடித்து உலகத்தையே வியப்பில் ஆழ்த்தினார். கடின உழைப்பிற்கு இன்னொரு எடுத்துக்காட்டாக விளங்குபவர் ஆபிரகாம் லிங்கன். செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனான இவர் தொடர் தோல்விகளால் மனந்துவண்டு போகாமல் கடினமாக உழைத்து அமெரிக்காவின் மிகச் சிறந்த ஜனாதிபதி ஆனார். இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவரான அப்துல் கலாம் சிறுவயதில் பத்திரிகை விற்பது போன்ற சிறு தொழில்களைச் செய்து வாழ்வில் முன்னேறியவர். ஒரு நபர் அடித்தட்டு மனிதராய் பிறந்து சாதனையாளராய் மாற வேண்டுமாயின் அவர் மிகவும் கடினமாக உழைத்தாக வேண்டும். இவர்கள் அனைவரும் வரலாற்றில் உயர்வாக போற்றப்பட காரணம் அவர்களின் கடின உழைப்பே ஆகும்.

ஒருவர் வாழ்க்கையில் வெற்றி பெற்று மிகச்சிறந்த இடத்தை அடைய வேண்டுமாயின் அவர் தான் இப்போது மேற்கொள்கின்ற பணிகளை மிகுந்த அர்ப்பணிப்புடனும் கடின உழைப்புடனும் மேற்கொள்ள வேண்டும். சில வேளைகளில் நமது ஒவ்வொரு முயற்சிகளும் தோல்வியைத் தழுவினாலும் நாம் மேலும் கடினமாக முயலும் போது இறுதியில் அவை வெற்றியையே பெற்றுத்தருகின்றன. நமது குறிக்கோள்களை மட்டும் கவனத்தில் கொண்டு அதீத முயற்சியுடனும் பொறுமையுடனும் உழைத்தால் வெற்றி எனும் சிகரத்தை அடைந்து விடலாம். ஆறறிவு உடைய மனிதர்களுக்கும் சரி, ஐந்தறிவு உடைய உயிரினங்களும் சரி ஒவ்வொருவரிற்கும் உழைப்பு மிக முக்கியமானதாகும்.

நூறு பேரை விட சிறந்தவராக விளங்க வேண்டுமென ஒருவன் நினைத்தால் ஏனைய தொண்ணூற்றொன்பது பேரை விட அவன் கடினமாக உழைத்தாக வேண்டும். உழைப்பில்லா பிறப்பு இறப்பிற்குச் சமம் என்று குறிப்பிடுகின்றார்கள். மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் சோம்பல்தனத்தை கைவிட்டு கடினமாக உழைத்தால் மட்டுமே

More papers at www.testpapersfree.com

வையகத்தில் வாழ்வாங்கு வாழ முடியும். கடின உழைப்பு ஒருவரை சிறப்பான பாதைக்கே இட்டு செல்லும். எனவே கடின உழைப்பை மூலதனமாக இட்டு வாழ்வின் உயர்ந்த இடத்தை அடைவோம்.

 (அடுத்த பக்கம் பார்க்க)

கேள்விகள்

Q1. முயற்சிக்கும் வெற்றிக்கும் உள்ள தொடர்பு யாது என வள்ளுவர் கூறுகிறார்?

(4 மதிப்பெண்கள்)

Q2. உழைப்பின் சிறப்புக்கள் யாவை? (7 மதிப்பெண்கள்)

Q3. தோமஸ் ஆல்வா எடிசனைப் பார்த்து உலகம் வியப்பில் ஆழந்தது ஏன்? (6 மதிப்பெண்கள்)

Q4. வெற்றிப் பெற ஒருவர் என்ன செய்யவேண்டும்? (7 மதிப்பெண்கள்)

Q5. சொற்பொருள் (8 மதிப்பெண்கள்)

பின்வரும் சொற்கள் மேற்கண்ட கட்டுரைப் பகுதியில் இடம்பெற்றுள்ளன. அவற்றின் பொருளை எழுதுக.

i. வருத்தி
ii. சித்தி
iii. அடித்தட்டு
iv. வையகத்தில்

More papers at www.testpapersfree.com

<u>சுயவிடைக் கருத்தறிதல் (2)</u> (33 மதிப்பெண்கள்)

பின்வரும் இரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து அவற்றின் அடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

<u>பனுவல் ஒன்று</u>

பிள்ளைகள் பாடங்களைச் சிறப்பாகப் படிப்பதற்குப் பெற்றோர்கள் ஏற்றச் சூழலை வீட்டில் ஏற்படுத்தித் தரவேண்டும். முதலில், படிப்பதற்கு நிலையான தனி அறையை ஒதுக்கி, அதில் புத்தகங்களைப் பாடவாரியாக அடுக்கி வைக்வேண்டும். இதனால், புத்தகங்களைத் தேடுவதற்கு அதிக நேரம் செலவு செய்யத் தேவையில்லை. அதோடு குறிப்பேடுகள், எழுதுகோள், தண்ணீர் புட்டி போன்றவற்றைப் பிள்ளைகள் அருகில் வைத்துக் கொண்டு படிக்கத் தொடங்கவேண்டும்.

பிள்ளைகள் வயிறு முழுக்க சாப்பிட்டுவிட்டு படிப்பதற்குப் பதிலாக, உணவை இரண்டாகப் பிரித்து படிக்கத் தொடங்குவதற்கு முன்பாக சிறிதளவும், படித்து முடித்த பின்பு நன்கு சாப்பிட்டுவிட்டு உறங்கும்படியும் ஊக்குவிக்கவேண்டும். வீட்டில் குடும்ப உறுப்பினர்களின் ஆதரவும் இன்றியமையாதது என்பதால் படிக்கும்போது இதர உறுப்பினர்கள் தொலைக்காட்சி பார்ப்பது, நண்பர்களை வீட்டிற்கு அழைத்து கலகலப்பாகப் பேசி சிரிப்பது, சத்தமாக கணினி விளையாட்டுகள் விளையாடுவது போன்றவற்றைத் தவிர்க்கவேண்டும். இவை பிள்ளைகளின் கவனத்தைத் திசை திருப்பிவிடும்.

'பள்ளி நாள்', 'விடுமுறை நாள்' என இரண்டு விதமான கால அட்டவணையை நேரத்திற்குத் தகுந்தாற்போல் தயாரித்து பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும். எந்தப் பாடத்தைக் கடினமாக கருதுகிறார்களோ அந்தப் பாடத்திற்கு மற்ற பாடங்களை விட கூடுதலாக நேரத்தை ஒதுக்கவேண்டும்.

பிள்ளைகள் இரவில் சீக்கிரமாகத் தூங்கச் சென்று, அதிகாலை மிகச் சீக்கிரமாக எழுந்திருக்கப் பெற்றோர்கள் பழக்கவேண்டும். அதிகாலை

More papers at www.testpapersfree.com

நேரத்தில் எந்தவித இடையூறும் இல்லாமல் அமைதியான சூழ்நிலை இருப்பதோடு மூளையும் புத்துணர்ச்சியுடன் இருக்கும். எனவே கடினமான பாடங்களைக்கூட அதிகாலையில் சுலபமாகப் படித்து விடலாம். இத்தகைய சூழல்களைப் பெற்றோர் அமைத்துக்கொண்டால் பிள்ளைகளால் நன்றாகப் படிக்க முடியும்.

– சுதா



<u>பனுவல் இரண்டு</u>

மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க பெற்றோர்களும் ஆசிரியர்களும் பெரும் பங்கு வகிக்கின்றனர். இவர்கள் எவ்வளவுதான் உதவியாக இருந்தாலும் மாணவர்களின் சுய முயற்சியும் பயிற்சியும் இன்றியமையாதது.

"பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்பார்கள் நம் முன்னோர்கள். இது உண்மைதான். ஒரு கருத்தை இருபது முறை படித்துக் கொண்டே இருப்பதை விட ஒரு முறை எழுதிப் பார்த்தால் நன்கு மனதில் பதியும். ஒரு முறை எழுதிப் பார்ப்பது பத்து முறை படித்ததற்குச் சமம். மாணவர்கள் ஒரு நேரத்தில் ஒரு பாடத்தை மட்டும் படிக்க வேண்டும். உதாரணமாக ஆங்கிலப் பாடத்தைப் படிக்கத் தொடங்கினால் அதில் படிக்க வேண்டிய பகுதிகளைப் படித்து முடித்த பிறகே வேறு பாடத்தைப் படிக்கத் தொடங்க வேண்டும்.

தேர்விற்கு ஒரு நாளுக்கு முன்பு குழுவாகப் படிப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். ஏனென்றால் அப்போது அரட்டைகளும், கிண்டல்களும், விவாதங்களும் வருவதற்கு நிறைய வாய்ப்பு உள்ளது. எனவே தேர்விற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக ஒரு நான்கு பேரை உடைய சிறிய அளவிலான குழுவுடன் படித்ததை ஒரு மீள்பார்வை செய்யலாம். தாங்கள் தனியாகப் படித்த முக்கிய வினாக்களை குழுவில் பகிர்ந்து கொள்ளலாம். அதோடு ஆசிரியர் மாணவர்களுக்குப் பாடம் நடத்துவது போன்று நினைத்துக்கொண்டு நண்பனுக்கு பாடத்தை

More papers at www.testpapersfree.com

நடத்தினால் எளிமையாக பாடங்கள் புரியும். பிறருக்குச் சொல்லித் தந்தால் பாடங்கள் நன்கு மனதில் பதியும்.

தேர்வின்போது உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் நிறைய பிரச்சினைகளை மாணவர்கள் சந்திக்க வேண்டிய சூழல் உள்ளது. இதனால், எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் 'தேர்விற்குப் பிறகு பார்த்துக்கொள்வேன்' என பிரச்சினையைத் தள்ளிப் போட்டு, மனதை மயிலிறகு போல லேசாக வைத்துக் கொள்ளவேண்டும். படிப்பதற்கு முதல் தேவை மனம். அம்மனதைத் தயார்படுத்திக் கொண்டு முயற்சி செய்தால் வெற்றி நிச்சயம்.

– சரளா



<u>வினாக்கள்</u>

Q6. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் ஒன்று) (6 மதிப்பெண்கள்)

பிள்ளைகள் இரவில் சீக்கிரமாகத் தூங்கச் சென்று, அதிகாலை மிகச் சீக்கிரமாக எழுந்திருக்கப் பெற்றோர்கள் பழக்கவேண்டும்.

(அ) எழுவாய் –

(ஆ) வினையெச்சம் –

(இ) ஐந்தாம் வேற்றுமை உருபேற்றச் சொல் –

More papers at www.testpapersfree.com

Q7. நண்பர்களோடு இணைந்து எவ்வாறு கல்வி கற்கலாம் என்று ஆசிரியர் கூறுகிறார்? (பனுவல் இரண்டு)

(5 மதிப்பெண்கள்)

Q8. கல்வி கற்பது குறித்து இரு எழுத்தாளர்களும் கூறும் கருத்துகளின் வேறுபட்ட கண்ணோட்டத்தை ஆராய்க.

(7 மதிப்பெண்கள்)

Q9. கல்வியில் சிறந்து விளங்க, சுய உழைப்புடன் பெற்றோர் மற்றும் நண்பர்களின் ஆதரவும் அவசியம் என்பதை ஏற்றுக்கொள்கிறாயா? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

((முற்றும்)



More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

EUNOIA JUNIOR COLLEGE
JC2 Preliminary Examination 2022
General Certificate of Education Advanced Level
Higher 2

# தமிழ் மொழி, இலக்கியம்
# Tamil Language, Literature

**9577/03**

**15 September 2022**

**3 hours**

தாள் 3
Paper 3

Additional Materials: Answer Booklet

Set texts may be taken into the examination room. They may bear underlining or highlighting. Any kind of folding or flagging of pages in text (e.g. use of post-its, tape flags or paper clips) is not permitted.

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாக்களுக்கு விடையெழுதவேண்டும்.
2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுத வேண்டும்.
3. மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடையெழுத வேண்டும்.
4. ஒவ்வொரு பகுதியிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடையெழுத வேண்டும்.
5. ஒவ்வொரு வினாவும் 25 மதிப்பெண்களுக்கு மதிப்பிடப்படும்.
6. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் இடத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்லக்கூடாது.

More papers at www.testpapersfree.com

இவ்வினாத்தாளில் மொத்தம் 6 பக்கங்கள் அச்சிடப்பட்டுள்ளன.

## ‘அ’ பிரிவு

**கவிதை** **(25 மதிப்பெண்கள்)**

Q1. திருக்குறளும் பழமொழி நானூறும், மனிதன் சிறப்பாக வாழ வழிகாட்டுகின்றன என்பதைச் சான்றுகளுடன் நிறுவுக.

Q2. கவிஞர் அப்துல் ரகுமானும் கவிஞர் வைரமுத்துவும் மனிதனிடம் கேட்கும் கேள்விகள் நியாயமானவையா? சான்றுகளுடன் விளக்குக.

## ‘ஆ’ பிரிவு

**சிறுகதை, நாவல்** **(25 மதிப்பெண்கள்)**

Q3. ‘காஞ்சனை’ என்னும் கதையில் வரும் எதிர்பாராத திருப்பங்கள் அக்கதையை விறுவிறுப்புக் குறையாமல் நகர்த்திச் செல்ல உதவுகின்றது. கதையிலிருந்து சான்று காட்டி இக்கூற்றினை நிறுவுக.

Q4. ‘சமுதாய வீதி’ என்ற நாவல், சமுதாயத்தின் ஒரு வீதியைப் படம்பிடித்துக் காட்டுகிறது என்பதை நீ ஏற்றுக்கொள்கிறாயா? சான்றுகளுடன் விளக்குக.

More papers at www.testpapersfree.com

(அடுத்த பக்கம் பார்க்க)



## 'இ' பிரிவு

**இலக்கியத் திறனாய்வு** (25 மதிப்பெண்கள்)

Q5. பின்னிணைப்பு 1-இல் கொடுக்கப்பட்டுள்ள 'இனி வாழ்க்கை இனிப்பே' என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்துத் திறனாய்வு நோக்கில் கதைக்கரு, பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

Q6. பின்னிணைப்பு 2-இல் கொடுக்கப்பட்டுள்ள 'காணி நிலம்' என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக. கவிதையின் பாடுபொருள், பொருள் நயம், சொல் நயம் ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும்.

## 'ஈ' பிரிவு

**நாடகம்** (25 மதிப்பெண்கள்)

Q7. 'ஊஞ்சல்' என்ற நாடகம் இன்றைய முதியவர்களின் நிலையைச் சித்தரிக்கிறது என்று கூறலாமா? நாடகத்தின் துணைகொண்டு விளக்குக.

More papers at www.testpapersfree.com

Q8. 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' நாடகத்தில் வரும் மகாதேவன், சுந்தரலிங்கம். இவ்விருவரில் யார் சிறந்தவன் என்று ஒப்பிட்டு எழுதுக.

(அடுத்த பக்கம் பார்க்க)



இனி வாழ்க்கை இனிப்பே
பின்னிணைப்பு 1

"இங்க பாருடா...இனிமேலும் ஒன் பொண்டாட்டிகிட்ட சண்டைபோட நம்மால முடியாது. என்ன கொண்டுபோய் எங்கயாவது விட்டுடு...", என்று அம்மா புலம்பினாள்....

'ம்... இன்னைக்கி என்ன செஞ்சாலோ என் அருமை பொண்டாட்டி' என்று நினைத்துக்கொண்டே உள்ளே வந்தான் சிவா....

இவன் முகம் கைகால் கழுவி வரவும்... நங்கென்ற சத்தத்துடன் கிண்ணத்தில் பால் பாயசம் வைக்கப்பட்டது....

"ஏன்மா வந்தவுடனே காபி கொடுக்கலாமே....? பாயாசத்த கொடுத்தா எப்படி? இன்னைக்கி என்ன ஸ்பெஷல்....!!", என்று கேட்டுக்கொண்டே....சாப்பிட ஆரம்பித்தான்....சிவா...

"ம்... வந்தவுடனேயே குடுக்கலன்னா... உங்கம்மாகிட்ட யாரு பாட்டு வாங்குறது?" என்றாள் கவிதா....

More papers at www.testpapersfree.com

"என்னங்க மறந்துடுச்சா... இன்னைக்கி உங்களுக்கு பிறந்த நாள் ஆச்சே.. அதான் காலையிலேயே அத்தை கிச்சன்ல பூந்து மணக்க மணக்க... முந்திரி திராட்சை வறுத்து போட்டு, சர்க்கரைய அதிகமா போட்டு, நான் வேணாம் வேணாம்ன்னு சொல்லியும் கேக்காம, இரண்டு கிண்ணத்த சாப்டுட்டாங்க.....

(அடுத்த பக்கம் பார்க்க)



ம்... நாளைக்கே சர்க்கரை அதிகமாகி டாக்டர்ட்ட போனா... அவர் என்னதாங்க திட்டுவாரு... ஏன்மா இத்தனை சொல்லியும் உங்க மருமக குணத்தை காட்டிட்டிங்களான்னு...

சர்க்கரை அதிகமானா இப்போல்லாம் எல்லாருக்கும் காலும் கிட்னியும்தான் அதிகமா பாதிக்கப்படுறதா சொல்றாங்க.... அதான் சர்க்கரைய கொஞ்சம் குறைத்துக்கொள்ள சொன்னா... கேக்கமாட்றாங்க.. எதுக்குங்க சொல்றேன் நம்மகூட கடைசிவரைக்கும் அவங்க நல்லபடியா இருக்கறதுக்குதானே", என்றாள்....

அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த கவிதாவின் மாமியார் உள்ளே வந்து... "கவிதா அந்த பூ கூடைய எடுடா... நான் கோவிலுக்கு போய்ட்டு வரேன்" என்று சொல்லி புன்னகையுடன்... சென்றார்...

More papers at www.testpapersfree.com

மனதில் இனிமேல் இந்த இனிப்பை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்துக்கொண்டு....

- எழுத்து.com

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும், - அங்கு
தூணில் அழகியதாய் - நன்மாடங்கள்
துய்ய நிறத்தினதாய் - அந்தக்
காணி நிலத்தினிடையே - ஓர்மாளிகை
கட்டித் தரவேண்டும் - அங்கு
கேணியருகினிலே - தென்னைமரம்
கீற்று மிளநீரும்.

பத்துப் பன்னிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர்போலே - நிலாவொளி
முன்பு வரவேணும், அங்கு
கத்துங் குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும், - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும்.

பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டுதர வேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா! நின்றன்
காவலுற வேணும், - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேணும்.
பாரதியார்



More papers at www.testpapersfree.com

விடைகள்

காணி அளவு நிலம் வேண்டும் அங்கு ஒரு மாளிகை கட்டித்தர வேண்டும்.
அழகான தூண்களையும், தூய நிறமுடைய மாடங்களையும் அது கொண்டிருக்க வேண்டும்.

நல்ல நீரையுடைய கிணறும் அங்கு இருக்க வேண்டும்.

இளநீரும், கீற்றும் தரும் தென்னை மரங்கள் வேண்டும். அங்கே முத்து போன்ற நிலவெளி வீச வேண்டும்.

காதுக்கு இனிய குரலின் குரேலாசை கேட்க வேண்டும். உள்ளம் மகிழுமாறு இளந்தென்றல் தவழ வேண்டும் என்று பாரதியார் வேண்டுகிறார்

More papers at www.testpapersfree.com